# <u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>

நாள் 13.08.2026

அசல் வழக்கு எண். 16/2023

பி.சா. 1. – ராம்மோகன் த/பெ.நாகரத்தினம் என்பவரின் முதல் விசாரணை தொடர்ச்சி

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

நான் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி கூடுதல் சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும்.

1) 16.09.2009 தேதியில் கனகசபாபதி முதலியார் எழுதிவைத்த உயில்சாசனம் ஆவண எண்.44/2009 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பு ஏற்கனவே மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சேபணை செய்யப்பட்டது.)

2) 16.09.2009 தேதியில் கனகசபாபதி முதலியார் எழுதிவைத்த உயில்சாசனம் ஆவண எண்.45/2009 சான்றிட்ட நகல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணம் வழக்கு சொத்திற்கு தொடர்பற்றவை என்று வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.)

3) 11.02.2022 தேதியில் அய்யன்பேட்டை கிராம புல எண் 35/3ஏ பட்டா எண் 78 என கனகசபை முதலியார் பெயரில் வழங்கப்பட்டுள்ள மனைவரி தோராய பட்டா உண்மை நகல் பி.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( மேற்படி ஆவணமானது எந்த தேதிக்குரிய ஆவணம் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று வாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.)

4) 24.03.1995 தேதியில் அய்யன்பேட்டை கிராம புல எண் 35/3 பட்டா எண் 78 என கனகசபாபதி முதலியார் பெயரில் வழங்கப்பட்டுள்ள

மனைவரி தோராய பட்டா அசல் மற்றும் சர்வே நோட்டீஸ் அசல் பி.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/-A.Mohamed Ali,

Additional Subordinate Judge,

Kancheepuram.